சுருக்கம்

நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம் – நிதியுதவி கோரும் விண்ணப்பங்களை மண்டலக் கலை பண்பாட்டு மையத்தால் கூர்ந்தாய்வு செய்வது – நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய உறுப்பினர்களின் பட்டியலை கணினி மயமாக்குதல் – அறிவுரைகள் வழங்குவது – தொடர்பாக.

---

சுற்றுலா மற்றும் பண்பாட்டு(பண்2)த் துறை

அரசு ஆணை(நிலை) எண். 154

நாள் 25–8–08
திருவள்ளுவர் ஆண்டு 2039
ஆவணி 9

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.82, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள். 9–3–08.
2. அரசாணை(நிலை) எண்.285, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத். துறை, நாள்.27–11–97.

மேலும் படிக்கவும்:–

3. அரசாணை(நிலை) எண்.70,சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, நாள் 26.4.07.
4. அரசு ஆணை (நிலை) எண்.03, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, நாள் 7–1–2008.
5. தமிழ் நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளரின் கடித எண். 2029/திட்டங்கள்/2007, நாள் 27–2–2008.

––––

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் விண்ணப்ப படிவத்தை வடிவமைத்தல், விண்ணப்பம் செய்தல், அதனைக் கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் தெரிவு நிலைக் குழுவின் பரிந்துரையுடன் நலிந்த கலைஞர்களின் பட்டியலை அரசுக்கு அனுப்பிவைத்தல் தொடர்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறவிண்ணப்பிக்கும் கலைஞர்களுக்கு வட்டாட்சியரால் வழங்கப்படும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர்களுக்குப் பதிலாக கோட்டாட்சியர்/ சார்ஆட்சியர் மேலொப்பம் செய்யலாமென ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் 13 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர் நல வாரியம் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர் வாரியத்திட்டங்கள் குறித்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் , நலிந்த கலைஞர் நிதியுதவித் திட்ட விண்ணப்பங்கள் முதலமைச்சரின் தனிப்பிரிவு அலுவலகம் வாயிலாகத் தமிழக அரசின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டு, அவ்விண்ணப்பத்தினை இனிமேல் சென்னையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் பெறுவதற்குப் பதில் ஆங்காங்கே இணையதளத்தில் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மேலே சொன்னவாறு, உண்மையில் நலிந்து வாழும் கலைஞர் எந்த விதத்திலும் விடுபட்டுப் போகாமல் பயனுறவும், போலி விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டு அவர்களை நீக்கம் செய்திடவும், மேலும் நலிந்து வாழும் கலைஞர்கள் தத்தமது விண்ணப்பம் தொடர்பாகச் சென்னைக்கு வந்து மன்றத்தில் விவரம் அறிந்து கொள்வதற்குப் பதில், அந்தந்த மாவட்டத்திலேயே கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என்றும் இதனால் நலிந்த கலைஞர்களுக்கு அலைச்சலின்றி செலவினம் மிச்சம்படுத்தும் பொருட்டு நடைமுறை விதிகளின்படி நலிந்து வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை மாவட்ட கலை பண்பாட்டு முகமையுடன் இணைந்து செயல்படுத்தலாமென்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் செயலாளரின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தைப் பரந்த அளவிலும், எந்த குறைபாடும் இன்றியும் செயல்படுத்தவும் மேலும் நாட்டுப்புறக் கலைஞர்களின் நல வாரியப் பயன்கள் மற்றும் அவ்வாரியத்தின் மூலம் ஒய்வூதியம் பெறும் கலைஞர்களுக்கும் நலிந்த கலைஞர் நிதியுமவித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கிடையே, எவ்வித குழப்பமும் ஏற்படாதிருக்கவும், உண்மையில் நலிந்து வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்கள் விடுபடாமல் பயன்பெறவும், மேலும் ஆண்டுதோறும் நிதியாண்டின் இறுதித் தருணத்தில் அரசாணை வெளியிட்டு அவசர அவசரமாக நலிந்த கலைஞர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்வதையும், நலிந்த கலைஞர்கள் தமது விண்ணப்பம் தொடர்பாக நிலை அறிய சென்னைக்கு வந்து செல்ல ஏற்படும் அலைச்சல், செலவு ஆகியவற்றையும் தவிர்த்திடவும், நடைமுறை விதிகளின்படி நலிந்து வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை மாவட்ட கலை பண்பாட்டு முகமையுடன் இணைந்து கீழ்க்கண்டவாறு செயற்படுத்தப்படவேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

1) ஆண்டுதோறும் ஜுன் திங்கள் முதல் வாரத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திருத்தி அமைக்கப்பட்டுள்ள திட்ட விண்ணப்பங்களைத் தமிழக அரசு இணையதளத்திலிருந்து நலிந்த கலைஞர்கள் நேரடியாகப் பெற்றுக் கொள்ளும்படி மன்றத்தால் விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

2) இணையதளத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவத்தில், நலிந்த கலைஞரைப் பற்றிய கலைத்தகுதி, திறமை, கலைக்காக ஆற்றியுள்ள கலைப்பணி ஆகியவற்றைத் தகுந்த சான்றுகளுடன் குறிப்பிட்டு, வயதுச்சான்று, வருமானச் சான்றிதழ், குடும்பத்தில் உள்ளவர்களின் வருமான விவரம் ஆகிய விவரங்கள் அடங்கிய குறிப்புகளையும் பூர்த்தி செய்து, அன்னார் சார்ந்துள்ள மாவட்ட வருவாய்க் கோட்டாட்சியர்கள் / சார் ஆட்சியர்களிடம் தேவைப்படும் சான்றிதழ்களையும் நேரடியாகப் பெற்று, அந்தந்த மண்டலக் கலை பண்பாட்டு மைய அலுவலகத்தில் ஜுலைத் திங்கள் இறுதி வாரத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3) மண்டலக் கலை பண்பாட்டு மையத்தில் பெறப்படும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், முதற்கட்டமாக உதவி இயக்குநர்களால் கூர்ந்தாய்வு செய்யப் பெற்று பின்னர் அதனை சம்பந்தப்பட்ட மாவட்டக் கலை மன்றத்தைக் கூட்டி, அதன் பரிசீலனைக்கு உட்படுத்தி பரிந்துரை செய்யும் பொருட்டு, அம்மன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட பட்டியலை செப்டம்பர் திங்கள் இறுதி வாரத்திற்குள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

மண்டலக் கலை பண்பாட்டு மையத்திடமிருந்து பெறப்படும் பரிந்துரைப் பட்டியலை மன்றத்தால் ஆய்வு செய்யப்பெற்று, அதனை தெரிவு நிலைக் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தி, தெரிவு செய்யும் நலிந்த கலைஞர்களின் பட்டியல் நவம்பர் திங்கள் முதல் வாரத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஆயுள் காப்பீடு செய்ய முடியுமா என்பது பற்றிப் பரிசீலனை செய்து அறிக்கையை தனியே அனுப்புமாறு கலை பண்பாட்டு ஆணையர்/ உறுப்பினர் செயலாளர் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இவ்வாணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு,
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர் (பொறுப்பு)
கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை–28.
உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை 28.
உதவி இயக்குநர்,
மண்டல கலைப் பண்பாட்டு மையம்,
காஞ்சிபுரம்/தஞ்சாவூர்/சேலம்/திருச்சிராப்பள்ளி/திருநெல்வேலி/மதுரை,
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள்
நகல்:
செயலாளர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை – 9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை –9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்